**Copy of Deposition**

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண்.02/2018**

**வாதி தரப்பு சாட்சி:2**

| | |
|---|---|
| பெயர்: பழனிச்சாமி (வா.சா.2) | ஜாதி: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

**2024ம்** ஆண்டு **ஜுன் மாதம் 11ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் எழுத்தர் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா:-2 முதல் விசாரணை:-**

வா.சா.2 ஆகிய நான் இந்த அசல் வழக்கில் 3ம் நபர் ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

**வா.சா.2 – குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு):-**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் சாட்சி சொல்வதற்காக வரவில்லை. வழக்கு பற்றிய விவரங்களை சந்திரசேகர் சொல்லித்தான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். நானும் ,வாதி சந்திரசேகரும் பழனி ஆண்டவர் ரைஸ் மில்லை குத்தகைக்கு எடுத்து ஓட்டி வந்தோம் என்றால் சரிதான். மேற்படி மில்லில் நானும் ஒரு பங்குதாரர்

என்றால் சரிதான். நானும், வாதி சந்திரசேகரும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த தாவா சொத்தின் விஸ்தீரணம் சுமார் 26 சென்ட் ஆகும். தாவா சொத்தான தடத்தில் வாதி அனுபவிப்பதை இடையூறு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தாவா தடத்திற்காக தாக்கல் செய்யப்படவில்லை, வாதி எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு வாதி கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள பாதையின் வழியாக லாரி வாகனங்களை மாமூலாக ஓட்டுவதில்லை, அதற்கு பதிலாக அவருடைய சொத்திற்கு வடபுறமாக ஒரு வண்டி தடம் உள்ளது, அதன் வழியாகத்தான் வாதி வண்டி வாகனங்களை ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல, தாவாவில் கூறியுள்ள தடத்தின் வழியாகத்தான் வாதி வண்டி வாகனங்களை ஓட்டி வருகிறார்.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(Sd xxx V. Loganathan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**Copy of Deposition**